[பேரவைத் தலைவர்]

நியமனத்தாள்கள் 9—12—1971 வியாழக்கிழமை காலை 11 மணிக்குப் பரிசிலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்புகிற வேட்பாளர்கள் 9—12—1971 வியாழக் கிழமை பிற்பகல் 3 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது, மூன்றுக்கு மேற் படுமாயின் 10—12—1971 வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே சென்னை கோட்டையில் இருக்கும் உறுப்பினர் ஓய்வு அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

(7) அரசினர் சட்ட முன்வடிவு

தமிழ்நாடு 1971-ம் ஆண்டு ஹோமியோபதி மருத்துவர்கள் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன் வடிவு எண் 25/1971). மீதான கூட்டாய்வுக் குழுவின் அறிக்கையை அளித்தல்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, தமிழ்நாடு 1971-ம் ஆண்டு ஹோமியோபதி மருத்துவர்கள் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 25/1971) மீதான கூட்டாய்வுக் குழுவின் அறிக்கையைத்* தங்கள் அனுமதியோடு வைக்கிறேன்.

..

(8) தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1971-72-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மீது விவாதம்

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1971-72-ம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையும், 1970-71-ம் ஆண்டின் துணை நிதி நிலை அறிக்கையும் இம் மன்றத்தின்முன் வைக்கப்பட்டுள்ளன. இவற்றை இம் மன்றம் ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டு மென நான் வேண்டுகின்றேன்.

1948-ம் ஆண்டு மின்சார (வழங்கல்) சட்டத்தின் 61-வது பிரி வின்படி, தமிழ்நாடு மின்சார ஆலோசனைக் குழுவின் ஒப்புதலைப் பெற்றபின், தமிழ்நாடு மின்சார வாரியம் கடந்த பிப்ரவரித் திங்களில், இந்த நிதிநிலை அறிக்கைகளை அரசுக்கு அனுப்பியது. ஆண்டு நிதிநிலை அறிக்கையும் துணை நிதிநிலை அறிக்கையும் சட்ட மன்றத்தினால் விவாதிக்கப்படலாம் என்றாலும், இவை வாக் கெடுப்புக்கு உட்பட்டவையல்ல. எனினும், இவ்வறிக்கைகள் குறித்து சட்ட மன்றத்தில் கூறப்படும் கருத்துக்களை மின்சார வாரியம் ஆழ்ந்து சிந்தித்து ஆவன செய்யும். சென்ற ஆண்டு மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கைகளின்பேரில் நடை பெற்ற விவாதத்தில் கூறப்பட்ட கருத்துக்களை ஒட்டி மின்சார

---

* 4—12—1971-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளி யிடப்பட்டுள்ளது.